விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28உ ஸ்தாபிக்கப்பட்டது

விசேஷ விளம்பரத்திற்கு!

[புத்தகம் ருஉ] யாழ்ப்பாணம்:— விஷு ஷு மார்கழி மீ கஅ உ (1942 ஜனவரி 1 வியாழக்கிழமை) [இலக்கம் எஉ]

## திருநாவுக்கரசர்

(திரு. பண்டித ந. மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள்)

(முற்றொடர்)

நாவுக்கரசர் தாம் முன்பு புறச்சமயம் புகுதலாகிய திருவடிப்பிழை செய்தும் இறைவன் தம்மைச் சூலைநோயால் ஒறுத்துத் தாம் அடைந்த வழி ஆட்கொண்டருளிய பேரருளை நினைந்து அவ்விறைமைக் குணத்தைப் பாராட்டுவாராகியே, அத் தன்மையனாய இராவணனுக்குப் பண்டு அருள் செய்ததனை ஒவ்வொரு பதிக விறுதியிலும் பாடிப் பரவுவாராயினர், சிவபெருமானது பேரருட்டிறம் இத்தகையதென மன்பதைக் குணர்த்தற் பொருட்டே ஆளுடைய பிள்ளையாரும் பதிகந்தோறும் இராவணன் செய்தி கூறுவாராயினர் எனக். இனித் திருநாவுக்கரசர் சிவபிரானே தமக்கருட்குரவராய் அருளுருக்கொண்டு ஞான முழுக்குச் செய்விக்கப் பெற்றவர் தாம் என்பதனை ...

இனி, நாவரசர் தேவாரத்து வறியலாகும் பொருட் பரப்பைச் ...

## பார்தோலியில் ஜவஹரின் சுதந்திர முழக்கம்

### "நாம் உலக நிலைமையை உணரவேண்டும்"

### "யுத்தத்தின் ஜுவாலை அடிமைத்தனத்தை எரித்துவிடும்"

நேற்று மாலை பர்தோலியில் நடந்த ஏறக்குறையப் பதினையாயிரம் பேர்களடங்கிய பொதுக்கூட்டத்தில் மகாத்மா, ஆஸாத, நேரு, கான் சகோதரர்கள், பண்டித பந்த், புலாபாய் ஆகியோர் பேசினர்.

இன்றோ நாம் நால் ஆற்காமல் 'சுயேச்சை எங்கே?' என்று கேட்க ஜனங்களுக்கு வாய் கிடையாதேன்று மகாத்மா.

சுயேச்சையிலேயே நிரும்பியுடைய நாம், உலக நிகழ்ச்சிகளை உணராமலிருப்பதற்கில்லை யென்று ஜவஹர் கூறினர்.

நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும், எனினும் ஜனங்கள் அச்சமடையக் கூடாதென்றும், யுத்தத்தைவிட அச்சம் ...

பேச்சாகும். நாம் அடிமைகளாகக் கிடப்பதால்தான் பிரிட்டனை எதிர்க்கிறோம். பாஸிஸம், நாஸிஸம் இவற்றை நாமும் எதிர்த்த போதிலும் நம்முடைய சுயேச்சையை மறந்துவிட முடியாது.

இந்த மகாயுத்தத்திற்குப் பிறகு உலகில் நிச்சயமாகப் புதிய முறை ஏற்படும். அதில் எல்லாநாடுகளுஞ் சுதந்திரம் பெற்று வாழும். இந்த யுத்தத்தின் ஜுவாலை அடிமைத்தனத்தை எரித்துவிடும். ஆனால், தியாகம் புரியாமல் எந்நாடும் சுதந்திரம்பெற முடியாது.

ஹிட்லரிடமோ அவருடைய சகாக்களிடமோ எனக்கு அநுதாபம் கிடையாது. அவர்கள் ஒழுக்கமற்றவர்கள். ...

### கூட்ட விவரம்

பர்தோலி டிச 26

...

பண்டித பந்தும், ஸ்ரீ புலாபாயும் பேசினார்கள்.

## அஸ்ஸாமில் யுத்த நிர்ப்பந்த நிலைமை

### கல்கத்தாவில் சர்வகலாசாலை ஏற்பாடு

ஷில்லாங் டிச 26

அஸ்ஸாம் யுத்த நிர்ப்பந்த நிலையில் இருப்பதாகச் சீக்கிரத்தில் அஸ்ஸாம் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிடுவார்கள். நகரப் பொது ஜனங்களைப் பாதுகாக்கும் விஷயத்தில தேசியக்கூட்டுக்கட்சிக்கு அஸ்ஸாம் காங்கிரஸ் கட்சி உதவுமென நம்பப்படுகிறது.

கல்கத்தாவில் சர்வகலாசாலைப் பரீக்ஷைக்கு ஆஜராகவேண்டியவர்கள் தங்கள் பரீக்ஷை ஸ்தலத்தை வெளியூர்களுக்கு மாற்றிக் கொள்ளச் சர்வகலாசாலை அதிகாரிகள் அநுமதி கொடுத்திருக்கிறார்கள்.

## அமெரிக்கக் கடற்படைத் தலைவர் கூறும் விவரம்

லண்டன் டிச 26

...

முன்னேற்ற நிலை அடைந்திருக்கிறோம். போருக்கு எங் கப்பல்கள் தயாராயிருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

## யாழ்ப்பாணத்தின் தற்காலச் சமய நிலை

எழுதியவர் மு. ஞானப்பிரகாசம் B. A. B. Sc. அவர்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள சமயஸ்தாபனங்களின் இயல்பையும் அவற்றின் வரலாற்றையும் அறிந்து, அவற்றைத் தற்கால முறைக்கு இயையச் சீர்திருத்த ஒவ்வொரு சைவமகனும் விழித்து எழுவானாக என்பதே இக்கட்டுரையாளரின் பிரார்த்தனை. முதற்கண் யாழ்ப்பாண மக்களின் தற்கால மன இயல்பைச் சிறிது ஆராய்வாம்.

ஆங்கில மொழியில மனிதனுடைய அருங்குணங்களு ளொன்றைக் குறிப்பது 'Sincerity' என்ற ஓர் அழகிய சொல். அந்த அருங்குணமுடையார் அகமும் புறமும் ஒத்து வாழும் இயல்பினர். அவர்கள் வாழும் வாழ்க்கையே உண்மை வாழ்க்கை. அவர்களே உண்மைப் பெரியார். அந்த அழகிய குணத்தின் குன்றாளாய் விளங்கியவர் குழக்னதகள் போன்ற ஆதிகாலத்து வேதரிஷிகள். காலஞ் செல்லச் செல்ல அந்த அழகிய குணம் தேய்ந்து தேய்ந்து இன்றைக்கு மனித சமூகத்தில் அது வெறும் பழாய்க் ...

... தைப் பிறர்க்கு விளம்பரப்படுத்தலாம். அவனைப் பார்த்து நாங்கள் ஒவ்வொருவரும் எங்களை விளம்பரப்படுத்தினால் அது எங்கள் வீழ்ச்சியின் அறிகுறி என்றது வேறென்னென்பேம். நாங்களோ "அடக்கம் அமருள் உய்க்கும், அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்ற உண்மையைக் கண்ட பெருமக்களின் வழித் தோன்றல்கள். விளம்பரம் அடக்கத்திற்கு வெகுதூரமல்லவா? அன்றியும், அந்த விளம்பரப்படுத்தும் வித்தை எங்கள் சைவப் பெரு நெறிக்கு என்றென்றைக்கும் அந்நியமானது. அப்பர்சுவாமிகள் அடியார் கூட்டங்களில் மறைந்து நின்று சம்பந்த சுவாமிகளை மறைந்துவர் காணுமே தொழுதருளியதும், அவர் தம்மைத் தாங்கும் சிவிகையினை வேறொருவர் அறியாமே தாங்குவாருடன் தாங்கிச் சிந்தை களிப்புறவந்தருளிய செய்கைஎன் உண்மை அடியார் விளம்பரத்தை விரும்பா இயல்பினர் என்பதைக் காட்டவில்லையா? "அண்டாளகளு! என்னை அறிவரேல் அறியவரா ...

## ஸத்தியாக்கிரஹத்தை நிறுத்த மகாத்மா இஷ்டப் படவில்லை?

### காரிய நிர்வாகசபைக் கூட்டத்தில் பேசியதென்ன?

### விவாதம் இன்னும் முடியவில்லை

பர்தோலி டிச 26

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் நான்காவது நாள் கூட்டம் இன்று நடந்தது. ராஜ்ய நிலைமை சம்பந்தமான விவாதம் இன்றும் தொடர்ந்தது. காந்திஜி பிரசன்னமாயிருந்தார். கமிட்டி ஒரு தீர்மானத்துக்கு வரக் குறைந்த பக்ஷம் இன்னும் மூன்று நாட்களாகுமென்று தெரிகிறது. ...

... பைசல் செய்வதற்கு முன்னதாக அங்கத்தவர்களுடன் மனம் விட்டுப் பேசிவிட அவர் எண்ணங் கொண்டிருப்பதே காரணமென்றும் "யுனைற்றற் பிரஸ்" செய்தி கூறுகிறது.

### பேசியதென்ன?

நேற்றுக் காந்திஜி பேசிய விவரம் கிடைக்கவில்லை. ஆனால், அஹிம்சையின் சக்தியை அவர் எடுத்துரைத்ததாகவும், ஸத்தியாக்கிரஹ இயக்கம் சம்பந்தமாக எழுந்துள்ள ...

### காந்திஜியின் உறுதி

...

### 2 மணி நேரப் பேச்சு

...

### கஷ்டமான நிலைமை

...

### உலக நிகழ்ச்சிகள்

...

### விசேஷ விஞ்ஞாபனம்

நாளை (2–1–42) ஆர்த்திரா தரிசன புண்ணியதின மாதலால், இந்துசாதனாலயம் சைவப்பிரகாச யந்திரசாலை யென்னுமிரண்டிலும் எவ்வகையான கருமங்களும் நடைபெறா.

—மானேஜர்.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஹு மார்கழி மீ கஅவ வியாழக்கிழமை

## புத்தாண்டு

1942-ம் ஆண்டாகிய புதிய ஆண்டு இன்று பிறக்கின்றது. இந்த ஆண்டுபிறக்கும்போது பல அசர்த்தங்களுடன்தான் பிறக்கின்றது. கிழக்கு உலகத்திலே நடைபெறும் யுத்தம் நான்தோறும் தடித்து வருகின்றது; இப்பொழுது கிழக்கிலும், மேற்கிலும் நடக்கும் யுத்தங்கள் இந்த ஆண்டோடு முடிவுறுமோ இல்லையேல் இன்னும்சில ஆண்டிற்கும் நடைபெறுமோ! முடியும்போது விரலக்குமி யார்பக்கல் நிற்பாள்; என்றகவலைகள் உலகத்தில் இப்போது உண்டாயிருக்கின்றன வல்லவா? மேலும் இந்தஆண்டு யாழ்ப்பாணமக்களாகிய எங்களுக்கு அதிக துயரத்தைக் கூட்டிக்கொண்டு பிறக்கின்றது. எப்படி? யாழ்ப்பாண மக்களுக்கு, சிங்கப்பூரும் மலாய்நாடும் சென்ற எழுபது, எண்பது வருட காலமாகக் குடியேற்ற நாடாகவிருந்தன. கைத்தொழில்விவசாயம் வியாபாரம் முதலியவை குன்றியுள்ள யாழ்ப்பாணத்து மக்களுக்குப் பிழைப்புக்காட்டிப் பொருளீட்டி வரச்செய்தநாடுள் பெரும்பான்மையும் சிங்கப்பூரும் மலாய்நாடுமேயென்பதை யாராயினும் மறுக்க நினைப்பரேல் அவர்கள் நன்றிகெட்டவர்களாவர்; அப்படியானநாடுகள், கொடிய யப்பானியர் தாக்கத் தொடங்கியமையினால் இப்பொழுது கவலைக்கும் அச்சத்திற்குமுரிய நாடுகளாகக் காணப்படலாயின. இனி, இங்குள்ள மக்களும் இக்தநேரத்திலே பஞ்சம், பசி, பொருண்முட்டு, தொழின் முயற்சியின்மை, எந்நேரமும் ஏக்கம், கடைப் பிரமாணம், முதலிய கட்டுப்பாடுகள் வந்துவிடுமோ என்ற அச்சம், பெற்றூர் உற்றூரையிட்டகவலை முதலியவற்றுடன் காணப்படுகின்றார்கள். மோட்டாரதம், பஸ், லொறி, முதலியவற்றை வைத்தோடிப் பிழைத்தவர்கள், எண்ணெய்க் கட்டுப்பாட்டுக் காரணமாக அந்தப்பிழைப்புக்கு இடையூறு உண்டாய்விட, அதனாற் கஷ்டப்படுகிறார்கள். இப்படியான சிலசில சஞ்சலத்தோடும் சஷ்டத்தோடும் இந்த ஆண்டு பிறக்கின்றதென்பது மெய்தான்.

இதனால் இந்த ஆண்டு சஞ்சலத்தோடுபிறந்து சஞ்சலத்தோடுதான் முடியுமென்பது பொருந்தாதாகும். தொடங்கும்போது துன்பத்தோடு தொடங்கும் கருமங்கள் பொருள்கள் முடியும்போது பூரண இன்பத்தோடு முடிதலும் சகசமன்றோ! நாங்கள் படிக்கப்புகும் கல்வியைப்பற்றிப்பெரியோர் என்ன சொல்லியிருக்கிறார்கள்? தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்" கல்வியென்றுதான்சொல்லியிருக்கிறார்கள்; அதாவது கல்வி தொடங்கும்போது அதைத் தொடங்குகிறதாகிய அந்தப் பிள்ளைக்குத் துன்பம்போல வெறுப்பாகத்தான இருக்கும்; காலகதியில் அந்தக்கல்வி துன்பமாயிருத்தல்நீங்கி இன்பத்தைத் தருமாம். இதைப்போலவே இந்தப் புத்தாண்டையும் நாம் மதித்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பொழுதுதான் என்னகெடுதி நேர்ந்துவிட்டது? சென்ற இருவருட காலமாக ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல ராச்சியங்களுடன் பெருஞ் சமர்புரிந்து அந்த இராச்சியத்தினரையும் நாடுகளையும் தம் ஆதிக்கத்துட்படுத்திய ஜர்மனியரும் அவர்களுக்கெல்லாம் சர்வாதிகாரியாகவுள்ள ஹிட்லரும் தங்களுக்கும் ருஷ்யருக்குமிடையே இப்பொழுது நடைபெறும் யுத்தத்தில தாம்பிடித்தவற்றையும் பறிகொடுத்து அபசெயமடைந்து வருகின்றனராம. ஆரம்பத்தில் யப்பானியா சூரத்துவமாய் எங்கள் பிருத்தானியரையும் அமெரிக்கரையும் யுத்த விஷயத்தில் விஞ்சிகின்றாலும் காலகதியில் அந்தயப்பானியர் தோல்வியடைதலுங் கூடுமென நாம் எண்ணினாற் பிழையாகுமா? ஆனதால் இவைகளைப்பற்றிச் சஞ்சலப்படுவதனால் அடையக்கூடிய பயன்யாதுமில்லையெனலாம்.

பிருத்தானியருடைய விசுவாசமுள்ள பிரசைகளாகிய எங்களிடத்தில் படைக்கலம் படைக்கலப்பயிற்சி முதலிய பாதுகாப்புக்கள் இல்லையென்பது மெய்தான்; எங்களுக்கு ஏதம் ஆபத்துநேருங் காலத்தில் எங்கள் அரசினரே எங்களைப் பாதுகாப்பரென்ற எண்ணத்துடன் வாழ்ந்தோம்; வாழ்கின்றோம்; வாழ்வோமென்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். அந்த நம்பிக்கையைக் கடைசிவரையில்நாம் கைவிடமுடியாது. "அனைவர்க்குந் தெய்வம் இறைமுகப் பைம்பூண் இறை" என்றாங்கு எங்களுக்கு அரசன் ஆராக இருந்தாலும் கண்கண்டதெய்வம் அல்லவா? இதனைநாம் எந்தக் காலத்தும் மறந்துவிடவொண்ணாது; மேலும் "நல்லகுருநாதர் நம்மைவருத்துவதும், கொல்லவல்லக் கொல்லவல்ல, பொல்லாக் குணம்போக்க", இப்படியான தீமைகளெல்லாம் பிற்காலத்தில்நன்மையடைதற்காகஇறைவன் ஆக்கும்வழியென்று நாம் திருப்திப்பட்டிருத்தல் வேண்டும். தெய்வத்திடத்து உறுதியான பத்தி பாராட்டுவார்க்கு எவ்வகையான சஞ்சலமு மில்லையென்பது பெரியோர் கொள்கை. ஆனதால் எல்லாம் இறைவன் செயல் என்று மனஆறுதலோடு நாம செய்ய வேண்டிய கருமங்களைச் செய்தே தீர வேண்டும். ஆக, இந்தப் புத்தாண்டைக் கைக்கொண்டு வரும் சகலசாதியார்க்கும் சகல மதத்தினர்க்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் சுபசோபனம் சொல்லுகின்றோம்.

*

### தேய்ந்த சல்லி செல்லாதாம்

கொழும்புப் பட்டினத்திலே நோட்டு மாற்றுவதற்குச் சில்லறைக் காசு இல்லை யென்ற கவலை; இந்தச் சங்கடத்தை நீக்குவதற்கு அதிகாரிகள் புதிய பிரமாணமும் வகுத்து, அப்பிரமாணத்தை மீறி நடப்பவர்களுக்கு அபராதத் தண்டனை சிறைத்தண்டனையும் நியமித்திருக்கிறார்கள்; இந்த யாழ்ப்பாணத்திலும் சில்லறைச் சல்லி விஷயத்திலும் ஒரு கஷ்டம் நேர்ந்துள்ளது. இக்காலத்திலே வழங்கும் வெள்ளி நாணகங்களும் செப்பு நாணகங்களும் மிகவும் தேய்ந்தவை; நூற்றுக்கு 25 விகிதமான நாணகங்கள் தாமும் தேயாதனவோ என்பது சந்தேகம்; பத்துச்சத நாணகங்கள் இந்த நாட்களில் தேயக்கூடிய வரையில் தேய்ந்து மின் செதில்போற் காணப்படுகின்றன வென்பது மெய்; ஆனல் இப்படித் தேய்ந்த பத்துசதம் ஒரு சதங்களை இங்குள்ள கடைக்காரரும் வியாபாரிமாரும், இவர்களைக் கண்டு ஊச்சனங்களுஞ் செல்லாக் காசுபோற் புறக்கணிக்கத் தலைப்பட்டு விட்டார்கள்; அறத் தேய்ந்தாலும் செல்லக் கூடிய நாணகம் செல்லுந்தானே; இந்த விஷயமாகப் பணப்பகுதியதிகாரிகள் சனங்களையும் வியாபாரிமாரையும் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்பதே நமது மூறையீடு; தேய்ந்த நாணகச் செல்லாப் பணமென எவராயினும் வாங்கமறுத்தால், அப்படி மறுப்பவர்களுக்கு இன்னதண்டனை யென்று விளம்பரஞ் செய்ய வேண்டும். "சந்தனமென் குறடு தான் தேய்ந்த காலத்தும் சந்தங் குறைபடாது" என்ற விதமாக எங்கள் பிருத்தானியருடைய நாணகங்கள் எப்படித் தேய்ந்தாலும் அதன் பெறுமதி குன்றப் போவதில்லை யென்பதை அரசினரே வியாபாரிமாருக்கும் பணத்தோடு ஊடாடும் எல்லாச் சனங்கட்கும் தெருட்டிவிட வேண்டும்.

இப்படிச் சனங்களைத் தூண்டுவதற்கு ஒரு உபாய முண்டு; தபாற்கந்தோர், புகைரதத் தானம், ஏனைய அரசாங்க உத்தியோகததானம் பட்டின பரிபாலன சங்கம் முதலிய தானங்களிலுள்ளவர்களை உண்மையான நாணகங்கள் தேய்ந்திருந்தாலும் ஏற்றுக் கொள்ளும்படி மேலதிகாரிகள் கட்டளை செய்வதே.

### பூகோள சாஸ்திரப் போதனாசிரியர்

#### வெளி நாட்டிலிருந்து தருவிக்க ஆலோசனை

அரசாங்க சபையின் அடுத்தகூட்டத்திற் சர்வகலாசாலைக் கல்லூரிக்கு இலங்கையரல்லாத ஒருவரைப் பூகோள சாஸ்திரப் போதனாசிரியராக நியமிப்பதற்கு ஒரு தீர்மானங் கொண்டுவரப்படுமென்று அறியப்படுகிறது.

சர்வகலாசாலைக் கல்லூரிச் சபை மேற்படி பதவிக்குத் தகுதியான ஒருவரை வெளி நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டுமென்று உத்தேசித்திருப்பதாயும் கல்வி நிருவாகசபை அதற்கு இணங்கியிருப்பதாயும் அறியப்படுகிறது.

சர்வகலாசாலைக் கல்லூரியிற் பூகோள சாஸ்திரப் போதனாசிரியர் பதவிக்கு மனுச் செய்த அபேட்சகர்கள் எவரும் அப்பதவியில் நியமிக்கத்தக்கதாக இருக்கத் தகுதியுடையவர்களல்லவென்று சர்வகலாசாலைக் கல்லூரிச் சபை அபிப்பிராயப்பட்டது. அதை அபேட்சகர்களிலிருவர் "விஸிற்றிங்" போதனாசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

அரசாங்கசபையின் அடுத்த கூட்டத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படைக்குப் பயிற்சி யளிப்பதற்கு இலங்கையரல்லாத ஒருவரைத் தருவிப்பதாகும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படும்.

# நேரு-சவர்க்கார்-இவர்களின் ஜின்னு-ராஜாஜி அரசாங்கம்

## இந்தியாவில் அமைக்க மிஸ்றர் சர்ச்சிலின் யோசனை

### ஆங்கிலப் பத்திரிகை கூறும் வழி

கல்கத்தா, டிச, 25

இந்திய ராஜீய நிலைமையிற் சமீபகாலமாக ஏற்பட்டுள்ள பல சம்பவங்களை முன்னிட்டும் ஐப்பான் யுத்தத்திற் சேர்ந்ததற்குப் பிறகு சர்வதேச நெருக்கடி முற்றியிருப்பதை உத்தேசித்தும் இந்திய விவகாரத்தை உடனே தீர்க்க வேண்டியது அவசியமென்று வற்புறுத்தி ஸ்டேற்ஸ்மன் பத்திரிகை இன்று ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அது கூறியிருப்பதாவது:-

#### தாராளமான பரிசீலனை அவசியம்

இந்தியாவிலுள்ள பற்பல ராஜீய கட்சிகளின் பிரமுகர்களும் சமீபகாலத்தில் வெளியிட்டுள்ள அறிக்கைகளைப் பொறுமையாகவும் தாராளமாகவும் பரிசீலனை செய்தாற் பிரச்னை தீருவதற்கு இடமிருக்கிறதென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

ஆயின், மிஸ்றர் சர்ச்சிலின் பேச்சுக்கள் இன்று வேதவாக்காக இருப்பதாற் பிருத்தானிய அரசாங்கத்தாரின் மனோபாவத்தை அவர் இறுதியாக முடிவு செய்யலாமெனக் கூறப்படுகிறது. ஆகவே அதைப்பொட்டி நாம் பின்வருமாறு யோசனை கூறுகிறோம்:-

#### நெருக்கடிதீர யோசனை

ஜனாப ஜின்னாவும் அவர்களுடைய நண்பர்களும் பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியர், ஸ்ரீ சவர்க்கார் இவர்களைக் கொண்ட ஓர் அரசாங்கத்தை அமைக்கலாம். அதற்குப் பிறகு தெய்வோசில் மிஸ்றர். நவிவர் கிட்டிலர் ஜுக்குஞ் சிங்கப்பூரில் மிஸ்றர். டப்கூப்பருக்கும் அளிக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தையே வைஸ்ராய்க்கும் அளிக்கலாம். அப்படி அளித்தால் வைஸ்ராய் இந்நாட்டிலேயே தங்கியிருக்கும் ஒரு மந்திரியாகிவிடுவார். அங்கிலேய அவர் இந்திய மந்திரிக்கு அடங்கி நடக்க வேண்டிய நிலைமை இராது.

### கூப்பன் மூலம் அரிசி விநியோகம்

#### அண்மையில் நடைக்கு வராது

கூப்பன் மூலம் அரிசி விநியோகம் சமீபத்தில் நடைக்குக் கொண்டுவரப்பட மாட்டாதென்று அறியப்படுகிறது.

இதுவரை அரிசிக் கையிருப்பு இலங்கையிற் குறையவில்லை. அரிசி யிறக்குமதியுக் திருப்திகரமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

அரிசி இறக்குமதி செய்பவர்கள் 6 வாரகாலத்திற்குப் போதிய அரிசிக் கையிருப்பை வைத்திருக்கும்படி எதிர்பார்க்கப்படுகின்றனரென்று அறியப்படுகிறது. எனினுங் குறித்த காலத்திற்கு வேண்டிய கையிருப்பை அரிசி வியாபாரிகள் வைத்திருக்கும்படி எதிர்பார்க்கப்படமாட்டாது. அரிசி வியாபாரிகள், பிரதானமாகச் சிறிய கடைக்காரர் அரிசியை வாங்குவதில் கஷ்டதகதக் குறைக்கு புகாக இக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

### நகரின் அடுத்த மேயர்த் தேர்தல்

#### ஜனவரி மீ 12-ந் திகதி

1942-ம் ஆண்டுக் கொழும்பு மேயர்த் தேர்தலை ஜனவரி மீ 12-ந் திகதி நடத்துவதற்குத் தற்காலிகமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று அறியப்படுகிறது.

நகரசபைக் கொம்மிஷனர் விடுதலையிலிருந்து திரும்ப அழைக்கப்படுமுன்னமேயே குறித்த தேதி நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே தேர்தலைச் சீக்கிரம் நடத்த வேண்டுமென்று கருதப்பட்டால் ஜனவரி மீ 12-ந் திகதிக்கு முன்பாகவே மேயர் தேர்தல் நடைபெறக்கூடும்.

நகரசபைக் கொம்மிஷனர் லீவில் இந்தியாவுக்குச் சென்றிருந்தாரென்பதும் ஜனவரி மீ 11-ந் திகதிதான் அவர் திரும்பி வருவாரென முன்னர் எதிர்பார்க்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

#### போட்டி ஏற்படலாம்

மேயர் பதவியிலிருந்து காலஞ்சென்ற டாக்டர். சரவணமுத்து அடுத்த வருஷமும் மேயர் ஸ்தானத்திற்குப் போட்டியிடுவார்.

இதுவரை அங்கத்தவர்களிடையே தனிப்பட்ட முறையிலோ அல்லது சேர்ந்தோ எவ்வித ஒப்பந்தமும் ஏற்படவில்லை. மேயர் ஸ்தானத்திற்குப் போட்டி யிருக்காதென்று கருதிவிட முடியாது.

உப மேயர் தேர்தலும் அதேதிகதியில் நடைபெறும்.

### சங்கிங் கல்கத்தா விமானப்பாதை

#### அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

சங்கிங் டிச 29

சீனு பர்மா விமானப் பாதையை இந்தியாவுக்கு விஸ்தரித்துச் சங்கிங் நகரைக் கல்கத்தாவுடன் இணைக்கும் புதிய விமானப் பாதை அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டிருப்பதாகச் சங்கிங் றேடியோ ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

# உலகம் பலவிதக்கதை

(முற்றொடர்)

#### ஐயா! "அவர் மிக நல்லவர்"

முதலியார் அன்று பின்னேரம் பிள்ளைகளும் தாமும் மாத்திரம் இருக்கும் சமயத்தில், மூத்த மகளைப்பார்த்து "கண்ணே அமிர்தம், உங்கள் ஆச்சி ஒரு டக்டரைப்பற்றிப் பெரிதும் பாராட்டிப்பேசக் கேட்டேன்; அந்த டக்டர் ஆர்? அவர் எப்படி உங்களுக்கு அறிமுகமானார்? அவரும் எங்களூரவராமே; அப்படியானால் அவர் அங்கே எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவரென்பது உங்களுக்குத் தெரியுமா? அவரைப்பற்றி நீங்கள் அறிந்தவரையில் எனக்குச் சொல்ல முடியுமா? நான் நேரில் அவரைக் காண்பேனாயின், ஒருபோது அவர் இன்னார் இன்ன சந்ததியைச் சேர்ந்தவரென்று அறிதலுங் கூடும்" என்று ஆவலுடன் வினவினார். "ஐயா, அவரை நாங்கள் முதன் முதற் கண்டது திருவண்ணாமலையிலாகும்; அங்கே நாங்கள் இருந்த மடத்திற்கு அவர் வந்தபோது ஆச்சி அவரை உபசரித்ததுண்டு; அதன் பின்னர் அவரை நாங்கள் இந்தத் தலத்திற்றான், தங்கச்சி வருத்தமாகக்கிடந்த நேரத்தில்,இங்கேசந்தித்தோம்; அவரும் எங்களுடைய நல்லகாலத்தினாற் போலும், தெய்வச் செயலாக, இந்தத்தலத்திற்கும் வந்து கோயில் வீதியிலுள்ள இன்னொரு மடத்திலே தங்கியிருந்தார்; எங்கள் மடத்திற்கு அயல்மடத்தில் இருப்பவர்கள், தங்கைச்சியின் சுகவீனத்தைக்கண்டு இங்குள்ள வைத்தியசாலை டக்டரை அழைத்துவரப் போனபோது, அவர் வேறெங்கோ அந்நேரத்தில் போயிருந்தபடியால், இவரை யழைத்து வந்தார்கள்; இவர் ஆச்சியையும் எங்களையும் முந்தியே அறிந்தவரானதினாற்போலும், தம்முடைய நேரத்தைச் சிரமத்தைப் பாராமல், எங்களைத் தம் நெருங்கிய சுற்றத்தவர்போல் மதித்து வைத்தியஞ் செய்தார்; நான் பணங்கொடுத்தபோது அவர் வாங்க மறுத்துவிட்டார்; தங்கைச்சியின் நோய் மாறிய பிறகு இரண்டுமூன்றுநாட் செல்ல, தாம் ஊருக்குப் போக நிச்சயித்துக்கொண்டு எங்களுக்கும் பயணஞ்சொல்ல வந்தார்; வந்தபோது நாங்கள் இந்தத் தலத்தைவிட்டுப் போகும்வரையும் அவரையும் இத்தலத்திலேதான் இருக்கவேண்டுமென்று ஆச்சிமூலமாகக் கேட்பித்தோம்; அவர் அப்படியே யாகட்டும் என்று சொல்லி இத்தலத்திலுள்ள மடத்திலேயே இருக்கிறார்; அவருடைய குணம், நடை, ஆசாரம், பேச்சு, எங்களுடன்ஊடாடி வரும் மரியாதையான முறை முதலிய நல்ல குணங்களையும் நாவடையில் நாங்கள் அவதானித்து அவரை இடையிடையே இங்கு வந்துபோக வேணுமென்று ஆச்சியைக்கொண்டு கேட்பித்தோம்; அதற்கு அவர் உடம்பட்டு அப்படிச் செய்தார்; நாங்கள் இருக்குமிடத்திற்கு எங்கள் கேள்விப்படி வரும் அவரை நாங்கள் இயன்றவரையில் மரியாதையாய் உபசரியாமல் விடுவது சரியல்லவென்று நினைத்து அவருக்கு ஏதும் சிற்றுண்டி தேநீர் முதலிய பானங்களை ஆச்சி மூலமாக வழங்குவித்து உபசரித்து வருகிறோம்; அவர் சென்னையிலுள்ள வைத்தியக் கல்லூரியில் ஆயுர்வேத டக்டராகப் படித்துப் பரீட்சையிற் சித்தியடைந்து விட்டதாகவும் இனிமேல் தாம் ஊருக்குப் போய் அங்கே வைத்தியத் தொழில்பார்க்க வேண்டுமென்றும் ஆச்சிக்குச் சொன்னார்; ஐயா, அவருடைய தோற்றமும் குணமும் ஒழுக்கமும் பெருந்தன்மையும் அவர் ஒரு நல்ல குலங்குடியிலே மாபிலே பிறந்தவரென்று மதிக்கத்தக்கவாயிருக்கின்றன; அவருடைய பெயர் சுந்தரராசன்; முதல் இத்தக் குன்றக்குடிப் பெருமான்; இரண்டாவதாக அந்த டக்டர்தான் ஐயா, என் அருமையான தங்கைச்சியின் உயிரைப் பாதுகாத்தவரென்று சொல்லலாம்; எங்கள் தங்கைச்சிக்கும் அவரிடத்தில் நல்ல விசுவாசமுண்டு" என்று சொல்லிக்கொண்டு அமிர்தாம்பிகை சுந்தராம்பிகையைப் பார்க்க, தகப்பனும் பார்க்க, சுந்தராம்பிகை நாணந் தலைக்கொள்ள அவ்விடத்தை விட்டு எழுந்து சாமியம்மா ளிருக்குமிடத்திற்குப் போயினாள்.

#### 'பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல்"

"மகளே, அவர் ஊரிலே ஆர் பகுதியைச் சேர்ந்தவரென்பதை உங்களுக்குச் சொல்லவில்லையா" என்று ஆவலுடன் மீட்டும் முதலியார் தம் மூத்தமகளைக் கேட்டார் "ஐயா, யாரோ மாணு முதலியார் பகுதியைத் தாம் சேர்ந்தவரென்றும் தமக்கு இன்னமும் விவாகமாகாத ஒரு சகோதரி யுண்டென்றும், தாமும் இன்னமும் விவாகஞ் செய்யவில்லை யென்றும் எங்கள் ஆச்சி கினைவிபோது சொன்னார்" என்றாள் அமிர்தாம்பிகை. கேட்ட முதலியார் சிறிது நேரம் யோசித்தார்; சந்தோஷப்பட்டார். "மகளே, மாணு முதலியார் மரபென்றால் அந்த மரபைத் தான் நாங்களுஞ் சேர்ந்துள்ளோம் அப்படியென்றால் அவர் விஷயமாக நாங்கள் சற்று முயற்சி செய்யவேண்டும்; அவர் விஷயத்தில் நாம் தலையிடுவதன் முன் சுந்தரத்திற்குச் சம்மதமாக இருக்குமோ என்றும் அறியவேண்டும்; அவருக்கும் சொந்தத்துள் பெண் உண்டோ என்பதையும் விசாரித்தறிய வேண்டும்; இந்தக் கருமம் தெய்வத்தின் அருளால் அநுகூலமாகு மென்றே என்மனத்திற் புலப்படுகின்றது; என் மகளே, ஒரு கருமத்தை யிட்டு ஆலோசிப்பதற்குத்தானும் எனக்கு ஒருவரில்லை; உன்னைப்பெற்றவள் இருந்தால் எனக்கு இப்படியான சங்கடமொன்றும் நேர்ந்திருக்க மாட்டாதம்மா...." என்று சொல்லித் தகப்பன் கவலைப்பட்டுப் பெருமூச்சு விட்டு, தாம் கவலைப்படக்கண்டாற் பிள்ளையுங் கவலைப்படு மென்று பயந்து "கண்ணே, உன் தாய்தான் இல்லாவிட்டாலும் அந்தச் சீமாட்டி பெற்ற பிள்ளை நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை" என்று தம் மகளைத் தேற்றித் தாமும் தேறினர் "ஐயா, நீங்கள் எதற்குங் கவலைப்பட வேண்டாம்; என்னைக் காட்டிலும் என் தங்கைச்சி அருமையான பிள்ளையல்லவா? நாங்கள் இருக்கும்போது நீங்கள் ஏன் ஐயா கவலைப்படுவான்? என் தங்கைச்சிக்கு அந்த டக்டர் விஷயத்தில் பூரண சம்மதம்; என்னை யொழித்து என் சகோதரிக்கு வேறான நோக்கம் எண்ணம் எக்காலத்தும் இல்லை ஐயா; ஆச்சியோடு அந்த டக்டர் பேசியபோது அவருக்குச் சொந்தத்திற் பெண் இல்லை யென்றும் தங்கைச்சியைக் கல்யாணஞ் செய்வதற்கு அவருக்கு முழுப்பிரிய மென்றும் அதுமானிக்கக் கிடந்தது; ஆனதால் அந்த விஷயத்தில் முயற்சி செய்யுங்கள். ஐயா, இதை எங்கள் அம்மாவுக்கும் எழுதித் தெரிவியுங்கள்; அம்மாவுக்கும் இது சந்தோஷமாயிருக்கும்" என்று மகள் பரிவுடன் சொன்னாள் தம் பிள்ளையின் வார்த்தையைக் கேட்டுக் கேட்டு முதலியார் உள்ளம் உருகினர்; அற்புதமடைந்தார்; தம் பிள்ளையின் பெருந்தன்மையை அகத்திற் பாராட்டினார்; இந்த அருமையான பிள்ளைக்கா அந்தச் சண்டாளி துரோகஞ் செய்ய நினைத்தாள் என்று தமது இரண்டாந்தாரத்தாளை வெறுத்தார். நான் பெற்றவள் என்னைப் பார்க்கிலும் எவ்வளவோ அறிவும் பெருங்குணமும் நிறைந்தவளாகக் காணப்படுகிறாளே, இதுவும் என் பாக்கியந்தான் என்று பெருமிதமடைந்தார்; தன் தங்கையில் என் பிள்ளைக்கிருக்கும் பாசம் அப்பிள்ளையைப் பெற்றவளாகிய மங்களத்திற்கு இல்லையே; எவ்வளவோ தீமைகளையெல்லாந் தனக்குச்செய்த சிறியதாயைப்பற்றி நான் ஏதுங் குறை சொன்னால் என் பிள்ளை மனம் வருந்துறானே; தாய் இறந்துபோக என் பிள்ளை எஞ்சியிராவிட்டால் என் வாழ்நாள் நித்திய சஞ்சலத்தோடல்லவோ முடியும் என்று முதலியார் பலவாறு நினைத்தார். "மகளே, இந்தச் சம்பந்தம் தவறாது நிறைவேறு மென்று உனக்குப் புலப்படுகிறதோ" என்று தகப்பன் கேட்க "ஐயா, தெய்வத்தின் அருளால் இது தவறாது நிறைவேறும்; இதிற் சந்தேகமில்லை; அப்படி நிறைவேறும்போது பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருக்கும் ஐயா" என்று அமிர்தாம்பிகை மனத்திடத்துடன் பகர்ந்தாள். முதலியார் மகிழ்ச்சியுடையவராய்த் தம் மகளைப் பார்த்து "உன் தங்கைச்சியை வரச்சொல்லடி யம்மா" என்று சொல்லுதலும், உடனே அமிர்தாம்பிகை எழுந்து தன் தங்கையிடம் போய் "தங்கைச்சி! உம்மை எங்கள் ஐயா வரச் சொன்னார்" என்று சொல்லுதலும் சுந்தராம்பிகை உடனே தன் பிதாவிடம் போனாள்; ஆனால் அமிர்தாம்பிகை தங்கையுடன் மீண்டு பிதாவிருக்கு மிடத்திற்குப் போகவில்லை; ஏன்! "உன் தங்கைச்சியை வரச் சொல்லு" என்று என் அப்பர் சொன்னாரே யொழிய, உன் தங்கையைக் கூட்டிவா, அழைத்துவா என்று அவர் சொல்லவில்லை ஆனதால் தங்கையோடு மாத்திரம் என் தகப்பனார் ஏதோ பேச விரும்புகிறார் போலும் என்று குறிப்பாக அறிந்து கொண்டாள் அமிர்தாம்பிகை யாதலினாற்றான் அவளுடன் கூடிக்கொண்டு போகவில்லை.

(வரும்)

### லங்கா ஆயுர்வேத வைத்திய கலாசாலைப்

#### பழைய மாணவர் சங்கம்

லங்கா ஆயுர்வேத சித்த வைத்திய கலாசாலைப் பழைய மாணவர்களின் கூட்டமொன்று டிசெம்பர் மாதம் 22ந் திகதி முற்பகல் 10மணியளவில் மேற்படி கலாசாலை மண்டபத்தில் டாக்டர் P. நாகலிங்கம் (தலைமையாசிரியர்) அவர்களின் தலைமையில் கூடியது.

அவ்வமயம் மேற்படி கலாசாலை பழைய மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது. மேலும் "சங்க நிர்வாகசபையார் தற்போதையசுதேச வைத்திய சட்டத்தின்படி மேற்படி கலாசாலைப் பட்டதாரிகளை A பிரிவில் பதிவு செய்யும்படி சுதேச வைத்திய போர்ட்டாரைக் கேட்டுக் கொள்ள வேண்டும்" என்பதாக ஒரு பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

—நிருத

### சைவ ஐக்கிய சங்கம் கைதடி

சென்ற விஷு வருடம் மார்கழி மாதம் 13-ம் திகதி (27 12-41) சனிக்கிழமை மாலை 7 மணியளவில் கைதடி முத்தர்க்கு நாசுவாய் வித்தியாசாலை மண்டபத்தில் இச் சங்கத்தின் பத்தொன்பதாவது ஆண்டு விழா திருநெல்வேலி வேதாந்த மடத் தலைவர் உயர் திரு. மகாதேவ சுவாமிகளின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கௌரவ காரியதரிசி வருடாந்த அறிக்கையைப் படித்தபின் தலைவர் முன்னுரையாக "சைவமும் தமிழும்" என்னும் விஷயத்தை விளக்கினர். பன்னிருகைட்டாணயன் க. சின்னையா வால் 'ஒழுக்கம்' என்னும் பொருள் பற்றி ஓர் உபந்நியாசமும், ஸ்ரீ செ. சின்னையாவால் 'வள்ளி திருமணம்' என்னும் விஷயம்பற்றி ஓர் கதாப்பிரசங்கமும் நடைபெற்றன. திரு. கணபதிப்பிள்ளை, திரு. நடராசா ஆகிய இருவரால் இனிய சங்கீதம் விருந்தளிக்கப்பட்டது. பின்னர், திரு. வ. கிருஷ்ணர் அவர்களால் 'சங்கம்' என்னும் பொருள்பற்றி சுவைததும்பு விரிவுரை நிகழ்த்தப் பட்டது. காரியதரிசி நன்றிகூற சுற்றிய தேவாரபாராயணத்துடன் இரவு 10½ மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

—நிருத.

# சிங்கப்பூரில் யுத்தகாலச் சட்டம்

## கொள்ளையடிப்போர் யுத்தப்படை நியாயஸ்தலங்களில் விசாரிக்கப்படுவர்

### மாலைமணி அடிக்கும் வழக்கமும் ஏற்படக்கூடும்!

சிங்கப்பூர், டிச, 31

இன்று சிங்கப்பூர்க் குடியிருப்பில் மாஷல் லோ எனப்படும் யுத்தகாலச் சட்டம் பிரகடனஞ் செய்யப்பட்டது.

பொதுசனப் பாதுகாப்புக்கு எதிராகச் செய்யப்படுங் குற்றங்கள் கொள்ளையடித்தல், துரோகச்செயல், எதிரிக்கு உதவியாயிருத்தல் முதலிய குற்றங்கள் யுத்தப்படை சேர்ந்த நியாயஸ்தலங்களில் விளங்கப்படும் என்று உத்தியோக முறையிற் கூறப்படுகின்றது.

எல்லோரும் தத்தம் இடங்களிற் சேரவேண்டியதற்கறிகுறியான மாலை மணி அடிக்கும் முறையும் கையாளப்படுமென்று குறிப்பாகக் கூறப்படுகின்றது.

மணிலாவிலிருந்து வந்த செய்தி ஒன்றின்படி, யப்பானியர் வடக்கிலிருந்து தெற்கே மிக்க உக்கிரமாக வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

# தந்திச் சமாசாரம்

## மனிலாமீது யப்பானிய ஆகாயப்படை

மனிலாத்தீவின்மீது யப்பானிய ஆகாயப்படை வெடிகுண்டுபெய்து அதிகஉயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் விளைக்கின்றதாம்; மனிலாநகர் பாதுகாக்கப்படாத பட்டினமென்று தெரிவிக்கப்பட்டபின்னரும் பகைவர் வெடிகுண்டுகளையிட்டுப் பலரைக்கொன்று சில பொருட்களையுஞ் சேதப்படுத்தினர். ஐல்பேர்ட்தீவை யப்பானியர் தாக்குகின்றனர்.

### பிருத்தானியா தாக்கப்படுமா!

அமெரிக்க மகாநாட்டுமக்களுடன் விருந்துண்ணும்போது பிருத்தானிய பிரதமமந்திரியாகிய மிஸ்டர். ஜெர்ஜில் அடுத்துவரும் வசந்தகாலத்தில் ஜர்மனியர் ஒருபோது இங்கிலாந்தைத் தாக்குதல் கூடுமென்றும் ஆனால் அவைகளுக்காகிய பாதுகாப்புக்கள் முந்தியேயுண்டென்றும் பேசினாராம்.

### ஈப்போவில் யப்பானியர்

29—12—41

சிங்கப்பூருக்கு வடக்கே 100 மைல்தூரம் வரையிலுள்ள ஈப்போவை ஜப்பானியர் வேகமாகத் தாக்குகின்றனராம். 4 மணிநேரத்தில் 18 முறை மேற்படி ஊரை ஜப்பானிய ஆகாயப்படைதாக்கி வெடிகுண்டுகளைச் சொரிந்ததாம்.

லின்காயக்குடாவில் மேலும் மேலும் ஜப்பானிய சைனியமும் வந்து சேருகின்றதாம்.

## ஜப்பானியர் இட்ட துண்டுப்பத்திரம்
### வெள்ளைப் பேய்களை எரித்துவிடுங்கள்

சிங்கப்பூரில் நத்தாத்தினத்தன்று முதன்முதல் ஒருஜப்பானிய ஆகாயவிமானம் மிகவும் உயரத்திலேபறந்துசென்று "வெற்றியென்னும் நெருப்பில் வெள்ளைப் பேய்களையெல்லாம் எரித்துவிடுங்கள்" என்னுங் கருத்தமைந்த துண்டுப்பத்திரங்களை இட்டதாம்.

### ஹொங்ஹொங் தீவில் யப்பானிய பரிபாலனப்பிரவேசம்

28—12—41

யப்பானிய தரைப்படை, கடற்படை, ஆகாயப்படையினரும் அவர்களின் சேனுபதிகளும் பலவாத்தியங்கள் இயம்ப, மேற்படிதீவுட் பிரவேசித்து வெள்ளிக்கிழமை (26-12-41) காலையில் ஹொங்ஹொங்தீவு முழுவதும் யப்பானியராற் கைப்பற்றப்பட்டதென்று கூவிக்கொண்டு பட்டினத்துட் பிரவேசித்தனராம். சிறைப்படுத்தப்பட்டோரின் தொகை 6000 வரையி லிருக்குமாம்.

## மலேயாப்பகுதியில் யப்பானியர் மீட்டுந் தாக்குதல்

### கோலாலம்பூரில் யப்பானிய ஆகாயப்படை

### சுமாத்திராவில் யப்பானிய ஆகாயப்படை வந்திறங்குதல்

யப்பானியசைனியம் சிறிதுஆறிவிட்டுப் பின்னர் இன்னும்அதிகசைனியத்துடன் மலேயாப்பகுதியைத் தாக்கத்தொடங்கியிருக்கின்றது.

ஈப்போவைக் கைப்பற்றுவதுதான் இப்பொழுது அவர்களுடைய நோக்கமாகும். அங்கே யப்பானியர் கோரமான யுத்தஞ் செய்கிறார்கள்.

சுமாத்திராவின் கிழக்குக்கரையிலேயுள்ள மீடான் என்னும் ஆகாயப்படைத்தானத்தின்மீது பகைவருக்குரிய 17 ஆகாயப்படைகள் வெடிகுண்டுகள்பெய்தன. இதனால் அங்கே 20 பேர் இறந்தனரென்றும் 40 பேர்வரையில் உள்ளடைந்தனரென்றும் சொல்லப்படுகின்றது. அவுஸ்திரேலிய ஆகாயப்படைகள் யப்பானியகுருயிஸர்க் கப்பலொன்றைத் தாக்கினவாம். மின்னகாஸாக் குடாநாட்டை யப்பானிய ஆகாயப்படைகள் தாக்கின. ஆனால் அதிகசேதம் நேரவில்லையாம். சோறங்கென்னும் இடத்தையப்பானிய ஆகாயப்படை தாக்கியபோது, வீடுகள், கடைகள், உத்தியோகஸ்தானங்கள், முதலியன தாக்குண்டு சேதப்பட்டனவாம் சிலஇடங்களில் தீப்பற்றியெரியக் காணப்பட்டதாம்.

### கோலாலம்பூரிற் சேதம்

பகைவர் கோலாலம்பூரில் தாக்கியபோது அரசாங்க உத்தியோகத்தானங்கள் தாக்கப்பட்டன. உயிர்ச்சேதமும் விளைந்தது; சமயசம்பந்தமான ஸ்தாபனங்கள் சில சேதமுற்றன; இஸ்லாமியருக்குரிய ஒரு பள்ளிவாசல் தாக்கப்பட்டுச் சிதைந்துபோக, அங்கே தொழுதுகொண்டிருந்தோர் மூவர் மாண்டனராம். ஈப்போவிலிருந்து பெண்களும், பிள்ளைகளும் பாதுகாப்பின் நிமித்தம் வேற்றிடங்கட்கு அகற்றப்பட மாட்டார்களென் பது தெரிவிக்கப் படுகின்றது.

### ஈப்போ கைப்பற்றப் பட்டது

29—12—41

ஈப்போ யுத்தமுனையில் பிருத்தானிய சக்கராதிபத்தியத்துக்குரிய சைனியம் பின்வாங்கநேர்ந்தமையினால் ஈப்போ பகைவராற் பிடிக்கப்பட்டுவிட்டதாம். ஈப்போ மலாய்நாட்டில் நான்காவது பட்டினமாகவுள்ளது; சிங்கப்பூர், பினங், கோலாலம்பூர், என்னும் மூன்றுமே முதற்பிரதானமான பட்டினங்களாம். ஈப்போவிலுள்ள சனத்தொகை 40000 தகரச்கைத்தொழிலே இப்பட்டினத்தின் பிரதானமுயற்சியாம். ரப்பர்த்தோட்டங்களும் இப்பட்டினப் பிரதேசத்தில் அதிகமாகும். இப்பட்டினத்தைப் பிடிக்கும்போது பகைவருக்குப் பெரும்சேதம் விளைக்கப்பட்டதெனப் பிருத்தானியசைனியம் பாராட்டுகின்றது.

### மனிலாக் குடா

மனிலாக்குடாவோரமாக ஜப்பானியஆகாயப்படை வெடிகுண்டிட்டபோது யப்பானியருக்குரிய நான்கு விமானங்கள் சுடப்பட்டனவாம்.

### யப்பானியருக்குரிய இரு கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன

யப்பானியருக்குரியனவான சைனியம் யுத்த உபகரணங்களைக் கொண்டுபோன ஒரு கப்பலையும், உணவுப்பொருள்களைக் கொண்டு போகும் ஒரு கப்பலையும் அமெரிக்க சப்மரின் கப்பல்கடலுள் அமிழ்த்திவிட்டதாம்.

### சறவாத்தலைநகர் பிடிக்கப்பட்டது

சறவாக்கின் தலைநகராகிய குச்சிங் யப்பானியராற் பிடிக்கப்பட்டதாம்.

மீடன், வோர்ட சுவற்றெனம் என்னுமிடங்களில் யப்பானியர் வெடிகுண்டு பெய்தபோது அவர்களுக்குரிய ஒருவிமானம் சுடப்பட்டதாம்.

### குருயிஸர்க் கப்பல் பற்றியெரிகிறது

செலிபிஸ் கடல் வடக்குநோக்கிச்சென்ற யப்பானிய குருயிஸர்க் கப்பலொன்று அவுஸ்திரேலிய ஆகாயப்படைஇட்ட வெடிகுண்டு காரணமாகப் பற்றியெரிகின்றதாம்.

### ருஷியரின் வெற்றி

ஆறுநாட்செய்த யுத்தத்தில ருஷியர் யப்பானியரிடமிருந்து 106 கிராமங்களைத் திருப்பிப் பிடித்துவிட்டார்களாம்.

### நார்வேயில் ஜர்மனியருக்கு நேர்த்த தோல்வியும் சேதமும்

நார்வேக்கணித்தான கடலில் ஜர்மனியருக்குரிய 8 கப்பல்கள் பிருத்தானியராற் கடலுள் அமிழ்த்தப்பட்டன. 120 ஜர்மனியர் கொல்லப்பட்டனர். கடற்படைக்குந் தரைப்படைக்குமுரிய ஜர்மனியர் 95 பேர் சிறைபிடிக்கப் பட்டனர்.

## விலை கூட்டி விற்றவருக்கு
### 300 ரூபா அபராதம்

கண்டியிலுள்ள P. S. மகமது சகோதரர் என்ற வியாபார கடையில்; ஒரு மூடை மில்ச்சாட் அரிசியை, கட்டுப்படுத்தப்பட்ட விலையைக் காட்டிலும் 55 சதம் மேலதிகமாக விற்றபடியால் அக்கடையிலுள்ள K. H. H. மகமது என்பவர் 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

## திருச்சி றேடியோ நிகழ்ச்சி

† இசைத்தட்டுகள்

### வெள்ளி ஜனவரி 2

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 வி. கல்யாணராம பாகவதர் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 மாதர் இன்னிசை † 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 வி கல்யாணராம பாகவதர் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருநாளைப்போவார் † 2.00 தமிழில் செய்திகள் 2-05 திருநாளைப்போவார் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 வி. ராகவன் பாட்டு 5-40 தூரான்-இ-ஷரீப் 5-50 கவ்வாலிகள் † 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 மன்னார்குடி மாணிக்கம் பிள்ளை நாகஸ்வரம் 7-00 இலக்கிய வாசகம் 7-15 கர்நாடகாலம் இசைச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 மன்னார்குடி மாணிக்கம் பிள்ளை நாகஸ்வரம 8-30 உலக விவகாரங்கள் பி பி. ஸி. பேச்சு 8-45 கானலோல வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் பி.பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு

### சனி ஜனவரி 3

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி சியாமளா வீணை பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப் பாட்டுகள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 விரும்பியவை † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி. சியாமளா வீணை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸி. எஸ். ஜயராமன் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5-00 ஸி. எஸ். ஜயராமன் பாட்டு 5-40 திருவெம்பாவை விளக்கம் 5-50 பஜனை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6—05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 மதராஸிலுள்ளபடி ஜெமினி வாத்ய கோஷ்டி 7-00 ஜப்பானில் செய்தது பேச்சு 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸிலுள்ளபடி கே. பொன்னையா பிள்ளை பாட்டு 9-15 திருவீழிமிழலை சகோதரர்கள் நாகஸ்வரம் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 யுத்தவிமரிசனம் பி. பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### ஞாயிறு ஜனவரி 4

காலை 7-30 கீதாரம்பம் † 7-40 தமிழில் செய்திகள் 7-50 வைத்யநாதன் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படங்களிலிருந்து † 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 திரைகானம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 பி. வைத்யநாதன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 சங்கீதம் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 சாத்தியகுடி ஸ்ரீமதி ஆர். மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 5-40 தேவாரத்தை (ஓதுவார்) 6—00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 ஸ்ரீமதி காமு அம்மாள் வீணை 7-15 புதிய உபயோகங்கள் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 சாத்தியகுடி ஸ்ரீமதி ஆர். மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 8-30 எங்கள் தபால் பெட்டி 8-40 ஸ்ரீமதி. காமு அம்மாள் பாட்டு 9-05 அமெரிக்க அபிப்பிராயம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் பி. பி. ஸி அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### திங்கள் ஜனவரி 5

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 எம். என். நடராஜ பிள்ளை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 குரல்வகை †9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சினிமா கீதங்கள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஆர். விநாயகநாதன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 எஸ். பாலகிருஷ்ணன் பாட்டு 5-15 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 எம். என். நடராஜ பிள்ளை புல்லாங்குழல் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 தியாகராஜ உத்ஸவ கச்சேரி 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் பி. பி. ஸி. பேச்சு அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## விலைக்கட்டுப்பாட்டு விளம்பரத்தை ஒட்டாதபடியால்

போரதனையில் அப்துல் ரஸிக் என்னும் ஒரு வியாபாரி தன் கடையில் விலைக்கட்டுப்பாட்டு விளம்பரத்தை ஒட்டாத குற்றத்திற்காக 15 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

## புதிய இலங்கைநேரம்
### கடிகாரம் அரைமணி கூட்டி வைக்கப்படும்

பகல்நேரத்தை மீதப்படுத்த ஏற்பாடு

ஜனவரிீ 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையி லிருந்து இலங்கை நேரத்தை அரை மணி நேரம் கூட்டி வைக்க உத்தேசிக்கப்பட் டிருப்பதாக அறியப்படுகிறது.

ஆரம்பத்தில் இலங்கை நேரத்தை ஒருமணி நேரம் கூட்டி வைக்கும் ஆலோசனை அரசாங்கத்தாரால் ஆலோசனை செய்யப்பட்டது. பல்வேறு அரசாங்கப் பகுதிகளின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொண்ட பின்னர் அரைமணி நேரமாக மாற்றப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

பகல் நேரத்தை மீதப்படுத்தும் ஆலோசனையைப் புதுவருடப் பிறப்புத் தினத்திலிருந்து நடைக்குக் கொண்டு வரவும ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்டது. ஆயின், கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் மாற்றமுண்டுபண்ணப் பட்டமையை முன்னிட்டுப் புதுவருடத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட் டிருக்கிறது.

அரசாங்கம் சம்பந்தப்பட்டவரை நேரம் முன்னதாகச் செல்வதால் இப்பொழுதுள்ள கால அட்டவணைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட மாட்டா. உதாரணமாகப் புகைரத அட்டவணை மாற்றியமைக்கப்பட மாட்டாது. அதேபோல அரசாங்கச் சிப்பந்திகளின் வேலை நேரத்திலும் மாற்றம் உண்டு பண்ணப்பட மாட்டாது.

இதுவிஷயம்பற்றிக் கூடிய விரைவில் ஓர் அறிக்கை வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கையின் உணவு உற்பத்திப் பிரச்னை
### உள்நாட்டு மந்திரியோடு மகாநாடு

யுத்த நிலைமை காரணமாக மாகாண நிருவாகத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டதால் அவசர நியமனம் பெற்ற அதிகாரிகள் யாவரும் இன்று பொறுப்பு ஏற்றுக் கொள்வார்கள்.

குறித்த அதிகாரிகள் யாவரும் சனிக்கிழமை உள்நாட்டு மந்திரி மேஜர். பான். ஜயதிலகாவோடு மகாநாடு கூடிப் பேசியபோது மாகாண நிருவாகத்திட்டம் பற்றி அவர்களுக்கு விவரித்துக் கூறப்பட்டது.

விவசாய மந்திரி மிஸ்டர். டி. எஸ். சேனநாயகாவும் விவசாய டைரக்டர் மிஸ்டர். எட்மண்ட் ரொட்ரிக்கோவும் மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்தனர். இலங்கையின் உணவு உற்பத்தியை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றி அவர்கள் குறித்த அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினர்.

## காலிமேயர்உபமேயர் தேர்தல்
### ஜனவரிீ 7-ந்திகதி நடைபெறும்

காலி டிச 25

காலி நகரசபைத் தலைவர் உபதலைவர் ஆகிய இரு ஸ்தாபனங்களுக்கும் ஜனவரிீ 7-ந் திகதி தேர்தல் நடைபெறும்.

காலி மேயராக விருக்க மிஸ்டர். டப்ளியூ. தஹநாயகா அடுத்த வருடத்திய தேர்தலில் அபேட்சகராக நிற்க மாட்டாரென்று அறியப்படுகிறது.

இப்போதைய உபமேயர் மிஸ்டர். எ. ஐ எச். ஏ. வஹாப் மேயர் ஸ்தாபனத்துக்குப் போட்டியிடுவார். இப்பொழுது அவர் ஒருவர் மாத்திரம் குறித்த ஸ்தாபனத்திற்கு அபேட்சகராக நிற்பாரென்று தெரியவருகிறது.

உபமேயர் ஸ்தாபனத்திற்கு மிஸ்டர். டப்ளியூ. டி. விஜயகுலசூரிய போட்டியிடப் போவதாக அறியப்படுகிறது. இதையொட்டி மிஸ்டர். ஏ. டி. சி. தஹாவத்தை மிஸ்டர். பி. தஹநாயகா ஆகியவர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## பொதுசன நன்மை விருத்திச்சங்கக்கூட்டம்
### கடைப் பிரமாணஞ் சம்பந்தமாகச் சில திருத்தங்கள்
### அதிகாரிகளுக்குமனுச்செய்ய ஆலோசனை

யாழ்ப்பாணத்தில் கடைப்பிரமாணத்தை நடைக்குக் கொண்டுவரும் விஷயத்திற் கடைகளைத் திறப்பதும மூடுவதுஞ் சம்பந்தமான உத்தரவுகளின் யாழ்ப்பாணப் பட்டினவாசிகட்கும் கிராமவாசிகட்கும் ஏற்றவாறு சில திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றும் இத்திருத்தங்களைப் பற்றிய ஆலோசனைகளைத் தலைவர் காரணங்களுடன் அதிகாரிகட்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்றும் யாழ்ப்பாணப் பொதுசன நன்மை விருத்திச் சங்கத்தின் கூட்டம் தீர்மானஞ் செய்தது. இத் தீர்மானத்தை அனுசரித்து மேற்படி சங்கத்தின் தலைவர் மிஸ்டர் C. பொன்னம்பலம் கீழ்காணும் விபரங்களடங்கிய ஆலோசனைகளைத் தொழில் மந்திரிக்கு அனுப்பியுள்ளார்.

1 யாழ்ப்பாணப் பட்டினவாசிகளும் மற்றையோரும் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் மற்றைய சாமான்களையும் பிற்பகலில்தான் வாங்குகிறார்கள். பிற்பகல் 5 மணிக்கும் இரவு 9 மணிக்கும் இடையிற்றான் கூடுதலான வியாபாரம் நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்திற் கடைகள் 9 மணி நேரம் திறந்து வைக்கப்படுதற்குப் பதிலாகப் 10 மணி நேரம் திறந்து வைக்கப்பட்டால் நன்றாக இருக்கும். ஆனால் சட்டப்படி இதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாவிடிற் கடைகளைக் காலை பத்தரை மணிக்குத் திறந்து இரவு பத்தரை மணிக்கு மூடவேண்டும். இந்த ஆலோசனைப்படி கடைகள் திறக்கப் பட்டு மூடப்படாவிட்டால் பொதுசனங்களுக்குக் வசதிக்குறைவும கஷ்டமும் ஏற்படும். மேலும் வெள்ளிக்கிழமைகள் இந்துக்களுக்கும் முகமதியர்கட்கும் புனிதமான நாளாகும். அன்று விரதம் அநுஷ்டிப்போர் தங்கள் உணவுப் பொருள்களை முன்னதாகவே வாங்கிக் கொள்வதற்கு ஏற்பக் கடைகள் காலை 7 மணிக்கே திறக்கப்படல் வேண்டும்.

2 யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான கடைகளில் வேலை செய்வோரும் வியாபாரிகளும் முகமதியர்கள், அவர்கள் வெள்ளிக்கிழமைகளில் மத்தியானம் 12 மணிக்கும் 1 மணிக்கும் இடையே ஆலயஞ் சென்று தொழுவதற்குச் செல்ல வேண்டும். மற்றைய இந்துக்களாகியவர்கள் பொதுவாக வெள்ளிக்கிழமைகளில் விரதம் அநுஷ்டித்து வருவதுண்டு. அவர்களில் அநேகர் ஒருவேளைச் சாப்பாடே வைத்துக் கொள்வதுமுண்டு. ஆகையால், அவர்கள் தங்கட்கு வேண்டிய உணவுப் பொருள்களை முன்னதாகவே வாங்க வேண்டியிருக்கிறது. இப்படியாக விரதம் அநுஷ்டிக்குந் தினங்களில் இந்த வியாபாரிகளும் தொழிலாளிகளும் அரைநாள் விடுமுறை எடுத்துக் கொள்ள விரும்புவார்கள். ஆதலால், சனிக்கிழமை அரைநாள் விடுமுறை விடுவதற்குப் பதிலாக வெள்ளிக் கிழமை அரைநாள் விடுமுறை அளிப்பது இந்துக்களுக்கும் முகமதியருக்கும் வசதியாக விருக்கும்.

3 கூலிதொழிலாளர்களும் மற்றைய தொழிலாளர்களும்தங்கள் தினசரி வேலை முடிந்த பின்னரே உணவுப் பொருள்களை வாங்குகிறார்கள். கடைகள் 6 மணிக்கே மூடப்பட்டு விட்டால் தொழிலாளர்கட்குள் மனவேற்றுமையும் அதிருப்தியின்மையுமுண்டாகும். ஆகையால் கடைகள் திங்கள், செவ்வாய்,புதன், வியாழன், சனிக் கிழமைகளில இரவு 7½ மணிக்கு மேலதான மூடப்பட வேண்டும். மேலும் கடைகளை மாலை 6மணிக்கு மூடுவதற்குப் பதிலாக இரவு 7½ மணிக்கு மூட வேண்டுமென்பதற்குப் போதிய காரணங்கள் மேலே முன்னமே கூறப்பட்டிருக்கின்றன.

4. யாழ்ப்பாணத்தில் மீன், இறைச்சி முதலிய சாமான்கள அதிகாலையிலேயே வாங்கப்படுகின்றன. பலர் காரியாலயங்களுக்கு அதிகாலையிலேயே போகிறார்கள். பழங்கள் காய்கறிகள், வெற்றிலை முதலியனவும் காலையிலேயே வாங்கப்படுகின்றன. ஆதலால், யாழ்ப்பாணத்தில் மேற் கூறிய சாமான்களை விற்பனை செய்யுங்கடைகள் காலை 8 மணிக்குத் திறக்கப்படுவதற்குப் பதிலாகக் காலை 7 மணிக்குத் திறக்கப்பட வேண்டும். அநேகர் தங்கள் தங்கள் சீவியத்தை நடத்துவதற்குப் பொருள் சம்பாதிக்க அதிகாலையிலேயே பெழுந்து சென்று விடுவார்கள்.

5. விசேஷ உற்சவ காலங்களிற் கடைகள் கூடுதலான நேரந்திறந்து வைக்கப்படுகின்றன. இந்துக்களின் தைமாதக் கொண்டாட்டத் தினத்திற்கு இது சம்பந்தமாகச் சலுகை அளிக்கப்படவில்லை. தைப்பொங்கலை யொட்டித் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், சனிக்கிழமைகளிற் கடைகள் காலை 10½ மணிமுதல் இரவு 9½ மணிவரையிலும் வெள்ளிக்கிழமைகளிற் காலை 10½ மணிமுதல் 7½ மணிவரையிலும் திறக்கப்பட வேண்டும், தைப்பொங்கல் தினம் இந்துக்களுக்கு மிகவும் புனிதமான தினமாகும். யாழ்ப்பாண வாசிகளில பெரும்பான்மையோர் இந்துக்களாவார்கள். ஆகையால் தைப்பொங்கற் காலத்தில் விசேஷமாக முதல்கள் இரவுதான் சாமான்களை வாங்குவார்கள். அன்றியும் உற்சவ காலங்களிலும் இரவில்தான் சாமான்களை வாங்குவது வழக்கம்.

க.நி

## பீஹார் அரசாங்கத்தின் எதேச்சாதிகாரம்
### மகாத்மா காந்தியின் கண்டனம்

மனித சுதந்திரத்துக்கு விரோதம்

பர்டோலி டிச 27—

மகாத்மாகாந்தி பின்வருமாறு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்:— ஹிந்து மகாசபைக் கூட்டத்தைப் பீஹார் அரசாங்கம் தடுத்ததன் காரணம் எனக்கு விளங்கவேயில்லை. மகாநாடு நடத்த விரும்பியவர்கள் மிக்க பொறுப்பமைந்தவர்கள். எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள். மத்திய அரசாங்கத்தின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள். அவர்கள் யுத்த ஏற்பாடுகளிலும் கலந்துகொண்டவர்கள். இத்தகையவர்களைப் பீஹார் கவர்ன்மெண்டார் சம்பாதுபோன காரணம் தெரியவில்லை. மகாநாட்டைச் சில தினங்கள் ஒத்திவைத்து ஒரு சமாஸமாகப் போகவும் ஸ்ரீமான். சவர்க்கார் இணங்கினர். ஆனால், எவ்வித முயற்சியும் பலிக்காது போகவே சாத்விக எதிர்ப்புத்தான் ஹிந்து மகாசபைக்கு ஒரு பரிகாரமாகக்கிடைத்தது. வீர சவர்க்கார் டாக்டர் மூஞ்சே முதலிய தலைவர்கள் நியாயமான உரிமைக்காகப் போராடிக் கைதியானது எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது; வங்க அரசாங்கம் புதிய பொக்கிஷ மந்திரி டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜியை அதே குற்றத்தைச் செய்து கைதியானர். கவுரவமான முறையில் சாத்விகமாக ஹிந்துமஹாசபைத் தலைவர்கள் பீஹார் அரசாங்க எதேச்சாதிகாரத்தைக் கண்டித்துக் கைதியானமை பற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

### இதுவும் ஒரு நன்மைக்கே

அதோடு எப்போதும் கஷ்டத்திலிருந்து ஒரு நன்மையே பிறக்கிறது. அதேபோலப் பீஹார் அரசாங்கத்தின் இந்தச் செய்கையால் பீஹாரில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டதோடு இந்தியாவிலுள்ள அனைவருமே மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க முற்பட்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் தாங்கள் எந்த உரிமையைக் கோருகிறார்களோ அந்த உரிமையைத் தங்கள் சகோதர ஸ்தாபனத்துக்கு அளிக்க ஒருநாளும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். இந்தப் பீஹார் பிணக்கு முடிய ஒருவழிதான் உண்டு. ஹிந்துமகாசபை சம்பந்தமான தடையை நிவர்த்தித்துச் சிறைப்பட்டவர்களை விடுவித்து மகாநாடு தடையுமின்றி மகாநாட்டை நடத்த அரசாங்கம் இடமளிக்க வேண்டும்.

## வெளியிடங்களுக்குப் போதிய அரிசிகிடைக்க வழி
### அநுமதிச் சீட்டுள்ளவர் அதிகமுடை வாங்க வசதி
### அரிசிச் சேமிப்புச் சட்டம் கையாளப்படும் விபரம்

அநுமதிச்சீட்டு வைத்திருப்பவர்கள் அரிசிக் குதங்களில் வாங்கக்கூடிய அரிசியின் கூடுதலான அளவு 20 மூடைகள் என்று அதிகமாக நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது.

சென்ற வாரத்தில், அநுமதிச் சீட்டு முறை ஏற்படுத்தப்பட்டபோது, ஒரு முறைக்கு வாங்கக்கூடிய அரிசியின் கூடுதலான அளவு 10 மூடைகளென நிர்ணயிக்கப்பட்டது.

வெளியிடங்களிற் போதிய அரிசி கிடைப்பதற்கு வசதியளிக்கவே இவ்வாறு கூடுதலான அளவு அதிகரிக்கப்பட் டிருக்கிறது.

### முறைப்பாடுகுறையுமென நம்பிக்கை

வர்த்தகர்களின் கடைகளிற் போதிய அரிசி இல்லையென்று சில நாட்களுக்கு முன்பு இலங்கையின் பல்வேறு பாகங்களில் முறைப்பாடு செய்யப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வெளியிடங்களிற் போதிய அரிசி சப்ளை கிடைப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருவதால் அடுத்த சில நாட்களில் குறித்த முறைப்பாடு குறைந்து விடுமென அதிகாரிகள் நினைக்கின்றனர்.

புதிய அரிசிச் சேமிப்புச் சட்டம் ஜனவரிீ 13-ந் திகதி நடைக்கு வருகிறது. அதன்படி ஒவ்வொரு வியாபாரியும் 2 வாரச் சப்ளைக்குப் போதிய அரிசியைச் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

### இரு பிரதான சாதகங்கள்

மேலும், அரிசி வியாபாரிகள் யாவரும் குறித்த திகதிக்குள் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு வியாபாரிகள் பதிவு செய்து கொள்வதால் இரு சாதகங்கள் ஏற்படுகின்றன. அவையாவது, வியாபாரிகள் அரிசிக்கு மிதமிஞ்சிய விலை வாங்க முயற்சிப்பதை விலைவாசிக் கட்டுப்பாட்டு அதிகாரி நன்கு தடுக்க முடியும். அதனோடு இப்பொழு திருப்பதைவிட அதிக அளவு அரிசியைச் சேமித்து வைப்பதற்கு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அதிகாரத்திற்குட்பட்டு மாகாணத் தலைவர்கள் அரிசிச் சேமிப்புச் சட்டத்தைக் கையாளுவார்கள்.

குறித்த சட்டத்தையாவது அல்லது அதையொட்டிய விதிகளையாவது பதிவு செய்யப்பட்ட வியாபாரி எவராவது மீறுவாரானால், அவரைப் பதிவு ரசமாவலியி லிருந்து விலக்கிவிட மாகாணத் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட் டிருக்கிறது.

சட்டத்தை மீறுவோர்களுக்குக் கூடுதலான அபராதம் ரூபா 1000 அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படுமென்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட் டிருக்கிறது.

அரிசி போதிய அளவு கைவசமில்லையென்று கூறி அரிசி இறக்குமதியாளர்கள் வியாபாரிகளுக்கு அரிசி விற்க மறுக்கக் கூடும். அதைக் குறைப்பதற்காக அத்தகைய சந்தர்ப்பங்களில அரிசிச் சேமிப்பில ஒரு பகுதியை விற்க இறக்குமதியாளர்களுக்கு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி அதிகாரமளித்திருக்கிறார். ஆயின், புதிதாக அரிசிஇறக்குமதியானவுடன சேமிப்பில் குறைந்துள்ள அரிசியை மீளவுஞ் சேகரித்து வைத்துவிட வேண்டுமென்று ஒரு பிரதான நிபந்தனை ஏற்படுத்தப்பட் டிருக்கிறது.

சி. எம். சாமி
மன்மதக் குளிகை
மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்றது, உலகெங்கும் புகழ்ப்பட்டது;
இதற்கு நிகரான ஔஷதம் வேறில்லை
ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்வாக்கிற்கு எழுதுங்கள்.

ஆர்டரோட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-430-3-41

வடமாகாண
ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது
அரசினரால் பதிவு செய்யப்பட்டது
அங்கத்தவர்கட்டளைப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது
30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-
1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-00
தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்
ச. பொ. இராசையா
காரியதரிசி,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணை
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்
H 145 1-12-41—31-5-42

குயின்பிருண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை — நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.
( Y. 21 11-8-40—10-8-41.) வி

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரோப்ரைட்டர்"
Y 19. 4-3-41—3-3-42 K. A இரத்தினசிங்கம்

புதிய வெளியீடுகள்
சிவிக்ஸ் (Civics) எனப்படும்
குடி இயல் நூல்
இலங்கை
வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.
(அங்கீகார இலக்கம். 21 A & B / 41 திகதி 3-7-41)
6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50
யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.
மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

கொழும்பு விவேகானந்தசபையில் 3-12-41ல்நடந்த பொதுக்கூட்டத்தில்

## திரு. சு. பெரியதம்பி B. A. அவர்கள்

## "திருந்தியசித்தமும் சிறுடைவாழ்க்கையும்"

என்னும் பொருள் பற்றி செய்த்திய சொற்பொழிவின் சாரம்

(முற்றொடர்)

இச்சையுணர்வுகளின் விளைவாகவே மனிதர் முயற்சியெல்லாம்பிறக்கும். இவ்விச்சையுணர்வுகளும் இரு செய்யத்தக்கது; என்னும் கருத்தாய் பரிணமித்தபின்னரே பகுத்தறிவுள்ள மனிதன் புத்திபூர்வமான கருமங்களைச் செய்தல் முடியும். எனவே, பகுத்தறிவுகொண்டுயர்வடையவேண்டிய மனித வாழ்க்கை திருந்திய இச்சைகளின் விளைவாய்த் தூய்மையு முயர்வும் பொருந்திய நிலைவுகளைக்கொண்டே சிறப்படையத்தக்கது. தூய எண்ணங்களும் உயர்ந்த குறிக்கோளும் சித்தத்தில் நிலைபெற்றாலன்றி மனிதவாழ்க்கை சீரடையுமாதில்லை. ஆகவே அநித்தமும் துன்பகாமுமான பொருட்களின்மேல் இச்சை செல்லுமேல் வாழ்க்கை சிறப்படைதல் சாலாது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்குமோ கிடையாதோ, கிடைத்த பின் அழிவுவருமோ என்ற அச்சமு கலக்கங்களுக்கும், கிடையாமற்பிறர் பெற்றின் புறக்கண்டு வெகுளியழுக்காறுகளுக்குமாளுகி மனிதன் பலவகைச் சிறுமையையும் எய்துகிற்பன். அநித்தமான பிரபஞ்சச் சார்பாய்த் தோன்றிய ஆசையிலழுந்தி பதன்பால் தன்னறிவைச் செல்லவிட்டோன் உண்மைப்பொருளை யறியமாட்டான்; அவன் சிலைதம்சாத செயல்களும் தூய்மையடைதலும் இல்லை. உண்டியுறக்கம் மைதுனம் என்பவற்றைப் பொருளெனக் கருதும் இவர்வாழ்க்கையில் தியாகம், வீரம் எவ்வாறு விளக்கும்? சிற பொருளோடி அதன்பால் சித்தத்தைப் பயிலவிட்டான் அறிவாற லொழுக்கங்களால் மேம்படுதல் சாலாது. தேகாதிப் பிரபஞ்சப் பற்றுக்காரணமாகக் காமக்குரோதாதிகளாற கலக்குண்ட சித்தம் புனிதமடைந்து தெளிந்தாலன்றி மனிதன் இறைவன் திருவடிப்பேறடைதல் முடியாதென்பது திணமுதலிய மயல் தீரமாறறுபு-விண்ணைத புவைய்ம மையாமெழுக்கை பன்பெலும்— புனலொடு விரவிய பூசினைசல நமண மெல மலையிடைவாரதிவிக்கமே; எனவரும் பிரபுலிங்கலீலைச் செய்யுளாலும் அறியக்கிடக்கின்றது. கற்சித்தினைக்களைக்கொண்டு நிச்சார்புணையும், தீயசித்தங்களையும் விலக்கித்திருந்திய குறிக்கோளைத் தியானபாவனைகள் கருவியாக ஸ்திர புத்தியோடு பற்றிநிற்பதனால் கலலொழுக்கம் நிலைபெறுதலும் வாழ்க்கை புனிதம் அடைதலும் கூடும். ஆகலின் இங்கும் சித்தசுத்தியாணையே சிறப்பாகியதாகும்.

அறிவை மறைத்து ஆற்றலைச் சிதறச்செய்து முயற்சியைக் கெடுத்து நிற்கும் ஆசையச்சம் முதலியவற்றுக்குச் சலியாத வைராக்கியத்தை கைவரப் பெற்றவர்களன்றி வினையோர்க்குப் போராடுதலும், அஞ்சா நெஞ்சமும் கலங்காச் சித்தமுடையாராய் எடுத்தகருமத்தை விடாது செய்து முடிக்கும் வீரவாழ்க்கை சித்திக்குமாதில்லை. சித்தம் திருந்தியவழியன்றி முத்திநிலை கைகூடாதென்பது சைவநூற்றுணிபு "பருவி

புதிய [1942] பாடத்திட்டத்திற்கு
இயைந்த
தமிழ் இலக்கிய வாசகங்கள்
5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை
1 இலக்கியவாசகம் முதற்பாகம் சதம் 15
2 ,, இரண்டாம்பாகம் சதம் 20
3 ,, மூன்றும் பாகம் சதம் 25
செந்தமிழ்க் கருவூலம்
திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழாம் தரங்களில் மாணவர்க்குச் செய்யுளிலக்கிய அறிவை வளர்த்தற்கேற்ற பாடபுத்தமாகக் கொள்ளத்தக்கது.
மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் சேமதமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)
பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்
மூலமும் உரையும்
பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சைக் வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய
திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள்
மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.
பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10
தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்.
இந்துசாதனம் 20.8.40
மனேஜர்.

## யாழ்ப்பாணத்தின் தற்காலச் சமயநிலை

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

ஆகிய இவை இனி, மேற் கூறப்பட்ட அருங்குணங்கள் மூன்றும் ஒருங்கே வகைப்பெற்றவரும், அஞ்சாமையும் அருள்விசமும் நிறைந்த எம் மாபெரும் தலைவருமாகிய நாவலர் பெருமான் இன்று இருந்தால் எங்களை நோக்கி என்ன சொல்லுவார் என்பதை அடுத்த இதழில் ஆராய்வாம்.

(தொடரும்)

## பட்டினசபை நியமன அங்கத்தவர்கள்

மொறட்டுவையிலும் தலவெலியாவிலும் நியமனம்

திருவாளர்கள் வி. ஏம். வி. டி. சில்வா, பி. க. ம. ஏம். லஹீர் ஆகிய இருவரும் தலவெலியா பட்டினசபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று சென்ற சனிக்கிழமை இரவு வெளியான விசேஷ கசெத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வல். பி. வி. பெர்னாண்டோ பட்டினசபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பொருண்மேலன்பாய் வானமும் போற்கிறது, திரியுச்சித்தந்தன்னைத் திருத்திச்சூனியதத சின்றும் மருவிச்ஞர் பிரிதலின்றி வானவர்க்கேட்டார், திருவு நிதகத்தப் பொருளினை யடைவரன்றே" என வரும் தேவிகாலோத்தரச் செய்யுள் கூறுவதுமிதுவே. உண்மை கிட்டை கூடாதவழிச சாதிக்கப்படும் உபாயநிட்டைகள் எல்லாம் பாவனையுமானவை என்றும் இப்பாவனையுமான உபாயநிட்டை முதிரதவழியே முத்திநிலை சித்திக்குமென அதிபூதிப் பெரியார் கூறுவனவும் வாழ்க்கையின் பரமப்பிரயோசனத்தை யடைதற்கண்ணும் சித்தவுத்தமசாதனமாயுதவு மென்பதை வலியுறுத்தும்

ஆறுமுகநாவலர் பதிப்புப் புத்தகங்கள்
ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு வே. கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜன்ற்" ஆக நியமித்திருக்கிறோம். மேற்குறித்த வியாபார ஸ்தலம் இந்துசாதன ஆபிசிற்கு முன்னுள்ளது. இன்று தொடக்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது கீழ்க்காணும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.
விலாசம்:-
V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.
Q 134 17. 11 41 16. 2. 42

விசேஷ விளம்பரம்
இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மெனி, பிரான்சு, முதலிய தேசங்களின் பிரதான சோதிசாஸ்திர நூல்களின் பிரமாணங்களைக் கொண்டு உங்கள் கைரேகையிலிருந்து எல்லா விதமான பலன்களையும் சொல்லக் கூடும்.
ஸ்புடம் தசவர்க்கம் முதலிய கணித வகைகளும் மகாதெசை புத்தி பலனும் அடங்கிய ஜாதகம் ரூபா 5 ஷ. விஷயங்களுடன் கோசர பலன் காலசக்கரபலன், பாவபலன், முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10.—
போக்கத்தை, நா. சின்னத்துரை
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7-41—19-7-42

வாதம், சலரோகம், குன்மம், முதலிய
எந்த
வியாதியானாலும்
உத்திரவாதத்துடன்
குணப்படுத்தப்படும்
சுகாதார மாஜி மந்திரி கனம்
Dr. T S S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr C.சபாபதி, M. B. C. M.
M R. C. S. L R C P.
முதலிய பலரால் புகழ்ந்து சர்டிபிக்கேட் அளிக்கப்பட்டன.
சேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்
Dr. K. S. Paripurnananda
Regd. MEDICAL Practitioner
R K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
JAFFNA
Q 129 6-11-41—5-2-42

## திருநாவுக்கரசர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நானேயிற் றூனே யென்னும் ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானர் திருச் செம்பொன் பள்ளியாரே"

என்பது, சிவஞானபோதம், பத்தாஞ்சூத்திரத்தில் உயிர்தானென நிலைபெறாவண்ணம் முதல்வனே யாம்படிநிற்றல் காணப்பட்டு அவ்வினைப்பணியில் வழுவாது நிற்றல் வேண்டுமெனக்கூறிய ஞானநிலையினை உணர்த்துதல் காண்க.

"முன்னமவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்று ளகலிடத்தா ராசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே"

உயிர்நிறைவேறுடு இரண்டறக்கூடுதலாகிய அத்துவிதமுத்தியைப் பெறுமாறு படிமுறையாக உருவகை வாய்ப்பட்டால் இதில் அருளிச் செய்துள்ளார். ஞானாதவமுனிவராகிய சுவாமிகள்.

இனி, உள்ளத்தூய்மையுற்று மெய்யுணர்வு பெறதற்கேதுவாகிய பன்னெறிகள் பலப்பல நாவரசர்பாடல்களில் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன.

"விரதமெல்லாம் மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்"
"பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள் மெய்யனை"
"கரும்பமருங் குழன்மடவார் கடைக்கண் நோக்கில்
துணங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப் பெரும் பயனை"

"துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் றன்னை"

என்பன காண்க. ஆயின், இறைவன்பால் உண்மை அன்பின்றி எத்துணை நோன்புகளை மேற்கொள்ளினும் எவ்வெவற்றைச் செய்யினும் அவற்றுனெல்லாம் பயனின்றென்பது அவர்கருத்தாதலை.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்குதண் குமரித் துறையா டிலென்
ஒங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்குமீச னெனா தவர்க்கில் லையே"

"வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈசனை யுள்குவார்க் கன்றிஇல் லையே"

என்றற் றொடக்கத்தனவாகிய சுழற்றுரையால் அறியலாகும். 'அம்பலக்கூத்தனைத் தினைத்தனைப்பொழுதும் மறந்துய்வனோ' 'நெக்குநெக்கு நினைப்பவர் நெஞ்சுளே, புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்' என்பன இறைவனை இடையறாது நினைத்தலின் உருகுதலை அவனைடைதற்கு நெறியாமென்பது அவரது உள்ளக்கிடையாதலைப் புலப்படுத்தும். மக்களெல்லோரும் இறைவன்பால் அன்புசெய்து உய்தி கூடவேண்டுமென்னும் பேரிரக்கத்துடன் அசுங்களை ஆற்றுப்படுத்துவனவும் அன்புநெறியிற் றலைப்படாரை நோக்கிஇரங்கிக் கூறுவனவுமாகிய பாடல்களும், பரசமயவறிவையும் புலமைத்திறத்தையும் வெளிப்படுத்துவனவாகிய உவமைகளும் பழமொழிகளும் கற்பனைகளும் அமைந்த பாடல்களும் பலப்பல. உள்ளன.

"முன்னை கோவக் கடைந்தவர் கிற்கவே
சங்கியாது சமுத்திர நஞ்சுண்டான்"

என்றற்போல சுவைச்சுவை அமைந்தனவுமுள. அவைகள் விரிவஞ்சிவிடப் பெற்றன.

இறுதியாகக் கூறற்பாலது திருவைந்தெழுத்தின்பால் நாவுக்கரசர்க்குள்ள உறுதியான பற்றாகும். பாவத்தையறுப்பதும், நடுக்கத்தைக் கெடுப்பதும், கலிநீக்கக்கொடுப்பதும், ஞானமாவதும், கல்வியாவதும், நன்னெறியாவதும் எல்லாம் அத்திருமறையே, என்கின்றார் அவர்.

"படைக்கலமாகவுன் னுமத் தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்"

"திருவாய்பொலாச் சிவாயநமவென்று நீறணிந்தேன்" என, அன்பு ததும்பக் கூறுகின்றார். பின்வருவதும் காண்மின்.

"நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே"

600 வருஷப் பழமை வாய்ந்தது
பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைல'முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.
"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.
நேத்திர ரத்தின தைலம் நோய்களை மாற்றப் பெயர் பெற்ற மருந்தெண்ணெய்
இத்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கண்குத்து, நீர்வடிதல், கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம், காம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும், கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும். இது மூளைக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்ணோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.
குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருவதற்கு உத்தரவாதமுடையது.
விலை ரூபா. 2/50
ஏஜெண்டுகள்:- எஸ் மால்ஜீ அமிஜீ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
Q 115 23-10-41—22-1-42

விளம்பர விகிதம்
முதன்முறைக்கு
ஒரலைல் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா 5.00
கால்கலம் ரூபா 4.00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
காலம் சிடித்த விளம்பரங்கள் விசேட விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் நேரிற் கண்டேனும் எழுதியேனும் ஒழுங்கு செய்யலாம். உடன்படிக்கை அனுப்பப்பட்ட விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்
வருஷம் நன்றாக யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள் தமிழ் ரூபா 5.00 இங்கிலீசு தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீசு தமிழும் 12.00
தொலைப்பு பகுதி 9.00 இங்கிலீசு தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Thursday January 1st 1942